# *புனித ஆசீர்வாதப்பர் (480 – 542)*

உலகில் பாவம் மிகுந்திருப்பதைக் கண்ட இவர், உலகத்தைத் துறந்து காட்டிற்குச் சென்றார். சுவியாக்கோ என்னும் மலையில் இருந்த ஒரு குகையில் தவம் செய்தும், செபித்தும் வாழ்வு நடத்தினார். அருகில் வசித்த ஒரு தபோதனர் இவருக்கு ஆன்ம சாங்கோபாங்கத்தைப் பற்றி போதித்தார். ஆசீர்வாதப்பரைப் பற்றிக் கேள்விப்பட்டு அநேகர் அவருக்கு சீடராயினர். அவர்களுக்கென்று அவர் சந்நியாச மடங்களைக் கட்டி வைத்தார். அங்கு அவர்கள் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு அவர் சட்டங்களை இயற்றித் தந்தார். 520-ஆம் ஆண்டில் அவர் மோந்தெகஸினோ என்னும் இடத்திற்கு சென்று ஒரு மடத்தை நிறுவினார். அவர் எழுதிய சட்டங்கள் புகழ் பெற்றன. அந்த மடம் உலகப் பிரசித்தி பெற்றதாயிற்று. அந்த சட்டங்கள் துறவிகள் உத்தமராகும் வியை தெளிவுறக் காட்டுகின்றன. துறவிகள் தங்களை அடக்கி ஆளவேண்டும். ஏதாவது ஒறுத்தல் செய்ய வேண்டும். தாழ்ச்சி, கீழ்ப்படிதம், செபம், மௌனம், மறைந்த வாழ்வு இவற்றை அவர்கள் நேசிக்க வேண்டும். உலகின் மீதும் அதன் கவலைகள் மீதும் அவர்கள் பற்று இன்றி வாழ வேண்டும்.

இவர் திவ்விய நன்மை உட்கொண்டார். பின் பீடத்தின் முன்னின்று கிஜகளை உயர்த்தி செபித்துக் கொண்டே உயிர்விட்டார். 24 பாப்புமார்களையும் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட புனிதர்களையும் இவரது சபை திருச்சபைக்குத் தந்திருக்கிறது.

**சிந்தனை:**

செபிப்போம், உழைப்போம். (புனித ஆசீர்வாதப்பர்)

**செபம்:**

புனித ஆசீர்வாதப்பரே, நாங்கள் உம்மைப் போல் பரலோக காரியங்களைப்பற்றி அடிக்கடி சிந்தித்து பேசும் வரம் பெற்றுத் தாரும்.